பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 02 வெள்ளிக்கிழமை 16.05.2025 கதிர் 188

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு கிழக்கில் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுமாறு ஜனாதிபதி அநுரவுக்கு எச்சரிக்கைவிடுத்துதமிழ்அரசுக் ☞ 2

# இனப்படுகொலை செய்யவில்லை என்றால் சர்வதேச விசாரணைக்கு எதற்காக அச்சம்?

## அமைச்சர் ஹேரத்திடம் கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசினால்இனப்படுகொலைநிகழ்த்தப்பட்டதாகக் கண்டறியப்படவில்லை என நீங்கள் உண்மையிலேயே நம்புவீர்களாக இருந்தால், சர்வதேசசுயாதீன குற்றவியல் விசாரணையை எதிர்கொள்வதற்கும், இலங்கை அரசு எவ்வித குற்றத்திலும் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்கும் எதற்காக அஞ்சுகிறீர்கள்? என அயலுறவுத்துறைஅமைச்சர்விஜித்தஹேரத்திடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கனடாவின் பிரம்டன் நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம், மே 10 அந்நகர மேயர் பற்றிக் பிரவுனால் திறந்து வைக்கப்பட்டது. அதுமாத்திரமன்றி கனடாவின் ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 104 ஆம் இலக்க தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரச் சட்டத்தின் பிரகாரம் மே 12 முதல்-18 வரையான ஒரு வாரகாலம் தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரமாகப்பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதன்கிழமை இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷை அயலுறவுத்துறை அமைச்சுக்கு அழைத்த வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், எவ்வித ஆதாரமும் அற்ற இனப்படுகொலைக் குற்றச்சாட்டு மற்றும் அதனை அடிப்படையாகக்கொண்ட நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் என்பன தொடர்பில் கடும் ஆட்சேபனையை வெளிப்படுத்தினார். அதுமாத்திரமன்றி இவ்வாறான நடவடிக்கைகள் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான தமது ஆளும்தரப்பின் முயற்சிகளைப் பெரிதும் பலவீனப்படுத்தி சிக்கலாக்குவதாகவும் அவர் விசனம் வெளியிட்டார்.

இதுகுறித்துகருத்துவெளியிட்டுள்ள தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "தமிழ்மக்களுக்கு எதிராக இலங்கை அரசினால் இனப்படுகொலைநிகழ்த்தப்பட்டதாகக் கண்டறியப்படவில்லை என நீங்கள் உண்மையிலேயே ☞ 8

## கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சி ஆட்சியமைக்க ஆரவு தாருங்கள்

### அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்தும் மஞ்சுள

உள்ளூராட்சிமன்றத்தேர்தலில்அதிகூடியஆசனங்களுடன் வெற்றி பெற்றுள்ள கட்சிக்கு ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவ்வாறில்லை எனில் 4 ஆண்டுகளுக்கு முரண்பாடுகளும், போராட்டங்களும் தொடருமேதவிர அபிவிருத்திகளுக்குவாய்ப்பிருக்காது ☞ 2

## எதிர்க் கட்சிகளின் ஆட்சிக்கு சபைகளில் உதவத் தயார்

### பொது ஜன ஐக்கிய முன்னணி அறிவிப்பு

எதிர்க்கட்சிகள் இணைந்து சபைகளை அமைப்பதற்கான முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியாக நாம் தயாராக இருக்கின்றோம். இது குறித்துவிரைவில்சகலஎதிர்க்கட்சிகளின்செயலாளர்களுக்கும் இடையில் விசேட பேச்சு இடம்பெறவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார். ☞ 2

## சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வோம் வாருங்கள்

### ஜனாதிபதிக்கு நாமல் சவால்

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் அரசமைப்பினை மாற்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்த ஜனாதிபதி விரும்பினால் சர்வசன வாக்கெடுப்பிற்கு செல்வோம். சர்வசன வாக்கெடுப்பில் ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சி தொடர்பில் மக்கள் தீர்ப்பொன்றினை வழங்கட்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் மே 15 வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று எம் மீது பெரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள். இன்று அதனைவிட மோசமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பெரும்பான்மையுடன் வெற்றி பெறாத சபைகளில் எவ்வாறு ஆட்சியமைக்கப் போகின்றனர் என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். அவர்கள் கட்சிகளுடன் பேச்சு நடத்தவில்லை. மாறாக தனிநபர்களுடனேயே பேசுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முரண்பாடுகள் ஏற்படக் காரணமும் அவர் தனிநபர்களுடன் ☞ 2

# பொல்பொட்டிற்கு நிகரானது ராஜபக்சவின் இனப்படுகொலை

## நாமலின் பதிவுக்கு பிரம்டன் நகர மேயர் பதிலடி

உலகில்இனப்படுகொலையாளிகள்என்று நிரூபிக்கப்பட்ட பொல்பொட், ஸ்லோபடோன் மிலோசெவிக், ஹென்றிச் ஹிம்லர் மற்றும் ப்லிஸீன்கபுகாஆகியோரைஒத்திருக்கின்றன ராஜபக்சக்கள் குடும்பம் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்திய குற்றங்கள். தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் ராஜபக்ச குடும்பம் எதிர்ப்பை வெளிக்காட்டுவது அங்கீகாரமாகும். இனப்படுகொலை நிகழவில்லை என்பதில் ராஜபக்ச குடும்பம் உறுதியாக இருந்தால் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணைகளுக்கு அவர்கள் முழுமையான ஒத்துழைப்பை




நகரத் தலைவரான (மேயர்) பற்றிக் பிரவுன் வலியுறுத்தினார். கனடாவின் பிரம்டன் நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ☞ 2

## உயிரோடு இருக்கும்போதே எமக்கான நீதியை தாருங்கள்

### காணாமலாக்கப்பட்டோரின் வயோதிபத் தாய்மார் இணைத் தலைமை நாடுகளுக்குக் கடிதம்

இலங்கை பாதுகாப்புப் படையினரால் வட, கிழக்கு மாகாணங்களிலிருந்துவலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களான நாம், ☞ 8

எம்மில்பலர்வயதுமுதிர்ந்ததாய்மார்களாவர். நாம் இன்னும் எவ்வளவு காலம் உயிருடன் இருப்போம்என்றுதெரியவில்லை. இருப்பினும் நாம் உயிருடன் இருக்கும்போது எமக்கான நீதி கிடைக்கப்பெறவேண்டும்என விரும்புகிறோம். ஆகவே எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை ஒரு நம்பத்தகுந்த சர்வதேச நீதிப்பொறிமுறைக்கு முகங்கொடுப்பதை உறுதிசெய்யக்கூடியவாறானதீர்மானமொன்றை நிறைவேற்றுங்கள் என வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின்உறவுகளின்சங்கம் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

## கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் இந்திய வங்கியுடன் கைச்சாத்து

இலங்கையின் வெளியகக் கடன்மறுசீரமைப்பு செயன்முறையின் முக்கிய அடைவாக இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கியுடன் கடன்மறுசீரமைப்பு தொடர்பானஇருதரப்புஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

இந்த திருத்தப்படக்கூடிய இருதரப்புஒப்பந்தம்இலங்கையின் வெளியகக் கடன்மறுசீரமைப்பு செயன்முறையின் கீழான கடன் வழங்குனர் மற்றும் பெறுனரின் 930.8 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் உடன்படிக்கைகள் சார்ந்ததாகும்.

அதன்படி இவ்விருதரப்பு ஒப்பந்தத்தில் இலங்கை ஆளும்தரப்பின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும், இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கியின் சார்பில் அதன் பொதுமுகாமையாளர்நிர்மித்வெட் மற்றும்பிரதிபொதுமுகாமையாளர் அமித் குமார் ஆகியோரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இது குறித்துக் கருத்து ☞ 8

## அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்தார் பிள்ளையான்

முன்னாள் அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை அவரது சட்டத்தரணிகள் ஊடாக தாக்கல் செய்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தப்பட்டு காணாமல்போனது தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்து தடுத்து வைக்க குற்றப் புலனாய்வுத் துறை எடுத்த முடிவு அவரது ☞ 8

## உப்பு இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த ஆளும்தரப்பு முடிவு

அமைச்சரவைக் கூட்டத்தில் இறக்குமதிகட்டுப்பாடுகளைத்தளர்த்தி உப்புஇறக்குமதிக்குஅனுமதிவழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றிருந்த நிலையில் ஜூன் 10 ஆம்திகதிவரைஉப்புஇறக்குமதிக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனூடாக, தொழிற்சாலைகளுக்குத்தேவையானபதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத உப்பு மற்றும் நுகர்வோருக்குத்தேவையானஅயடின் கலந்தஉப்புஇறக்குமதிக்கேஇவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## இனி இது .....

கட்சி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியன வீராவேச அறிக்கைகளை விடுத்தன. மே 28க்கு முன்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மீளக் கைவாங்கப்படவேண்டும் என்றும் இல்லையேல் ஜனாதிபதி வடக்குக்குக் வரமுடியாதபடிசெய்வோம்என்றுதமிழ்அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் அறிவித்திருந்தார். அதுமட்டுமன்றி ஒரு சட்டத்தரணி குழாமுடன் சென்று, ஆளும்தரப்பின் அறிவிப்பால்பாதிக்கப்பட்டமக்களுக்குசட்டஉதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தார். தமிழ் காங்கிரஸ் காலக்கெடு எதனையும் அறிவிக்காத போதும் ஆளும்தரப்பின் இந்த முயற்சிக்கு எதிராகப் போராடுவோம் என்று அறிவித்தது.

அறிவிப்போடு இந்த விவகாரம் அப்படியே அமைதியாகிப்போய்விட்டது. தமிழ் அரசுக் கட்சியின் அறிவிப்பு முடிவடைய இன்றும் 12 நாட்களேஎஞ்சியிருக்கின்றன. அதற்கிடையில் வர்த்தமானிஅறிவித்தலைத்திரும்பப்பெறுவதற்கான வாய்ப்புக்களுக்கான அறிகுறிகள் எவற்றையும்காணவில்லை. இந்தவிடயத்தில் ஆளும்தரப்பு இறங்கிப்போவது தமிழ்க்கட்சிகளுக்கு அடங்கிப் போய்விட்டதான கருத்தை தெற்கில்பரப்பிவிடும்என்றுஜேவிபிகருதுவதன் காரணமாக, விட்டுக்கொடுப்பதற்கு ஆளும்தரப்புத் தயாரில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த விடயத்தில் பின்வாங்குவதற்கு துறைசார் அமைச்சர் தயாரில்லை. அரச நிர்வாக அதிகாரத்திலுள்ளவர்களின் பேரினவாதச் சிந்தனைக்குள் அமைச்சர் புதைக்கப்பட்டுவிட்டார் என்பது தெளிவாக உணரப்படுகின்றது. கொழும்பு அரசுக்குக் காணிகள் தேவைப்பட்டால் அவற்றை எடுப்பதற்கு என்ன செய்வது என்று தேடிப்பிடித்தே இந்தப் பழங்கால பிரிட்டிஷ் ஆட்சிக் காலச் சட்டத்தைக் கொண்டு காணிகளை அரசுடமையாக்கும் திட்டம் அதிகாரிகளால் தீட்டப்பட்டு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்போது தனது அமைச்சரையும்கட்சியையும்விட்டுக்கொடுக்க முடியாத பொறிக்குள் ஜனாதிபதி அநுரவும் சிக்கிக் கொண்டுள்ளார் என்று அறிய முடிகின்றது. அதனால் மே 28க்கு முன்பாக வர்த்தமானி அறிவித்தலை ஆளும்தரப்பு மீளப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தப் பக்கத்தில் பரபரப்பாக அறிவிப்புக்களைவிடுத்தபோதும்வர்த்தமானிமீளப்பெறப்படவில்லைஎன்றால்அதனைஎப்படிஎதிர்கொள்வது, போராட்டத்திற்கான தயார் நிலை என்ன என்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகளும் தயாராவதாகத் தெரியவில்லை. வழக்கம் போல இந்த விவகாரமும் அறிவிப்போடு ஒதுங்கிவிடுமோ என்று காத்திருக்கிறார்கள் மக்கள். மாவையின்வழக்கமான"போராட்டம் வெடிக்கும்" வகையான அறிவிப்புத்தானா இது என்றும் பார்த்திருக்கிறார்கள்.

மறுபுறத்தில் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்எதிரியானதமிழ்காங்கிரஸும்இந்த விடத்தில் போராட்ட அறிவிப்பைச் செய்தது. ஆனால் அதுவும் பெரும் பேராட்டத்திற்கான ஏற்பாடு எதனையும் செய்வதாகத் தெரியவில்லை. வழக்கம்போல கட்சியின் தலைவர்கள் 10 பேரோடு மேலும் சிலரையும் சேர்த்துக் கொண்டு ஒரு அடையாளப் போராட்டம் நடத்தலாம் என்பதுதான் அவர்களின்திட்டமோஎன்பதும்புரியவில்லை.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்காக, அதிகாரத்தைப் பிடிப்பதற்காக முன்னாள் கூட்டமைப்புக் கட்சிகளும் சந்திரகுமாரும் ஜனநாயகப் போராளிகளும் இப்போது ஒரே அணியில் திரண்டு வரும் நிலையில், போராடப் போவதாக காங்கிரஸும் அறிவித்திருக்கும்நிலையில்ஆளும்தரப்புக்கு எதிரான நில ஆக்கிரமிப்புப் போராட்டமாக இதனை பெருமெடுப்பில் நிகழ்த்துவதற்கான திட்டமிடலை தமிழ்க் கட்சிகள் இணைந்து செய்வதற்குத் தவறினால், வழக்கும்போல போராட்ட அறிவித்தலை ஊடகங்களில் வெளியிடுவதோடுதமதுகடமைமுடிந்துவிட்டது, போராடுவதும் போராட்டத்திற்கு வருவதும் மக்களின் கடமை என்று நினைத்தால் கடவுளே நினைத்தாலும் இனிமேல் தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற முடியாத நிலைதனர் வரும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொல்பொட்டிற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழின அழிப்பு நினைவகம், மே 10 அந்நகர மேயர் பற்றிக் பிரவுனால் திறந்து வைக்கப்பட்டது. இதனைமகிந்தராஜபக்சவின் மகனான நாமல் ராஜபக்ச கடுமையாக விமர்சித்திருந்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அவர், குறித்து தீவிர கரிசனையைவெளிப்படுத்திதனதுஉத்தியோக பூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார். அதில் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் இலங்கை இராணுவத்தினர் இனப்படுகொலையில் ஈடுபட்டனர் என்று நிரூபிக்கப்படவில்லை எனவும், அவ்வாறு நிரூபிக்க முடியாது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அப்பதிவை மேற்கோள்காட்டி தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன், "தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் ராஜபக்சக்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்பானது அக்குடும்பத்தின் கைகளில் உயிரிழந்த அப்பாவி மக்களை நினைவுகூருவதில் நாம் சரியான பாதையிலேயே பயணிக்கிறோம் என்பதற்கான வலுவான சமிக்ஞையாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

''இனப்படுகொலை நிகழவில்லை என்பதில் உறுதியாக இருந்தால், நீதியை நிலைநாட்டுவதில் இடையூறுகளை ஏற்படுத்துவதைவிடுத்து, சர்வதேசகுற்றவியல் நீதிமன்ற விசாரணைகளுக்கு ராஜபக்ச குடும்பம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். ஆனால் இந்தக் குடும்பம் (ராஜபக்ச குடும்பம்) பொறுப்புக்கூறலை எதிர்கொள்வதற்குப் பதிலாக, இலங்கை அரசினால் பாதுகாக்கப்படும் ஆடம்பர பெருவாழ்வுக்குள்பதுங்கியிருக்கிறது" எனவும் பற்றிக் பிரவுன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் ''ராஜபக்ச குடும்பத்தினால் நிகழ்த்தப்பட்ட மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் பொல் பொட், ஸ்லோபோடன் மிலோசெவிக், ஹென்ரிச் ஹிம்லர் மற்றும் ப்லிஸீன் கபுகா (வெவ்வேறு நாடுகளில் இனப்படுகொலைகள் மற்றும் மீறல்களை நிகழ்த்தியவர்கள்) ஆகியோரை ஒத்திருக்கின்றன. எனவே அவர்கள் தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் எதிர்ப்பு வெளிக்காட்டப்படுவது என்பது எமக்கான அங்கீகாரமாகும்" எனவும் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு - பிளவர் வீதியில் உள்ள முன்னாள்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் எதிர்க்கட்சிகளுக்கு இடையில்விசேடசந்திப்பொன்றுஇடம்பெற்றது.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துவெளியிட்டபோது இதனைத்தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும்தரப்பு 23 இலட்சம் வாக்குகளை இழந்துள்ளது. வெற்றி பெற்றுள்ளவற்றில்கூட 50 சதவீதமான உள்ளூராட்சி மன்றங்களில் ஆளும்தரப்பால் ஆட்சியமைக்க முடியாது. அவற்றில் எதிர்க்கட்சிகளுக்கே அதிகாரம் கிடைத்துள்ளது.

இது தொடர்பில் கட்சிச் செயலாளர்களுக்கு இடையில் பேச்சு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் இணைந்து சபைகளை அமைப்பதற்கான முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணியாக நாம் தயாராக இருக்கின்றோம்.

மக்கள் செய்தியொன்றை வழங்கியிருக்கின்றனர். ஆளும்தரப்பு சபைகளை அமைக்கும்போது அதற்கான பதிலை நாம் வழங்குவோம்.

ஆளும்தரப்பு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியைமைத்து அழுத்தத்தை பிரயோகிப்போம். அதனை விடுத்து ஆளும்தரப்புதற்போதுபயணிக்கும்பாதையில் தொடர்ந்தும்செல்வதற்குஇடமளித்தால்எமக்கு இந்த நாடும் இல்லாமற்போகும் என்றார்.

## சர்வஜன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்தியமைதான். அவருடனான சந்திப்பிலும் எமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவாகத் தெரிவித்திருக்கின்றோம். கடந்த காலங்களில் ஏனைய கட்சிகள் அவற்றின் ஆண்டு நிறைவினைக் கொண்டாடியபோது ஆற்றிய உரைகளை மக்கள் மீண்டும் கேட்க வேண்டும்.

அவர்கள் நாட்டுக்கு ஆற்றி சேவைகள் தொடர்பிலேயே உரையாற்றினர். ஆனால் ஏனைய கட்சிகளைப் பற்றி அரசியல் பேசவில்லை. முதல் முறையாக மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு கட்சி அதன் ஆண்டு நிறைவு விழாவில் எதிர்தரப்பினரைபழிவாங்கும்நோக்கத்திலான உரைகளை ஆற்றியமை உண்மையில் கவலைக்குரியதாகும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த 6 மாதங்களில் நாட்டுக்கு எவ்வித சேவையும் ஆற்றவில்லை. அதனால்தான் ஏனைய கட்சிகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றார்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். நாட்டில் அரசமைப்பொன்று உள்ளது. அந்த அரசமைப்பினை மாற்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப்பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனில், சர்வசன வாக்கெடுப்பிற்கு செல்வோம். சர்வசனவாக்கெடுப்பிற்குசென்று மக்களுக்கு தீர்மானிக்கும் உரிமையை வழங்குவோம். ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சி தொடர்பில் மக்கள் தீர்மானிப்பர். நல்லாட்சியை முன்னெடுக்கவேண்டும் என்பதையே சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது என்பதை ஜனாதிபதிக்கு நினைவுபடுத்துகின்றோம் ஷ- என்றார்.

# வாளால் வெட்ட முயன்றவரை சுட்டுக் கொன்ற பொலிஸார்

கடமையில்இருந்தபொலிஸ்அதிகாரிகளை வாளால் வெட்ட முயன்ற நபர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

சட்டவிரோதமதுபானம்தொடர்பில்பொலிஸ் அவசர அழைப்பு பிரிவுக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, தெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கினிமெல்லகஹ பிரதேசத்தில் உள்ள வீடொன்றை பொலிஸார் சோதனையிட்ட போதே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதன்போது, தெலிக்கடை பொலிஸ் அதிகாரிகளை நபரொருவர் வாளால் தாக்க முயன்றபோது, அங்கிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

பின்னர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர், காலி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

காயமடைந்த நபர் 30 வயதுடையவர் என்றும்அவரதுநிலைமைமோசமாகஇல்லை என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

# 5 மாதங்களில் 965 பேர் விபத்துக்களில் உயிரிழப்பு

நாடளாவிய ரீதியில் இவ்வருடம் ஜனவரி முதல் மே மாதம் 14 ஆம் வரையான காலப்பகுதியில் மாத்திரம் வீதி விபத்துக்களின் காரணமாகசுமார்965பேர்உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், நாடு தழுவிய ரீதியில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 14 ஆம் வரையான காலப்பகுதியில் 1,842 பாரதூரமான சேதங்களை ஏற்படுத்தக் கூடிய வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன் குறித்த விபத்துகளில் சிக்கி சுமார் 965 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர சிறியளவிலான சேதம் மற்றும் பாதிப்புகளுடன்கூடிய902வீதிவிபத்துக்களும் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் போக்குவரத்து பிரிவு தரவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கவனக்குறைவாகவும்அதிகவேகத்துடனும் வாகனம் செலுத்துதல், மது போதையில் வாகனம் செலுத்துதல், உரிய காலப்பகுதியில் வாகனங்களை பழுதுபார்க்காமை மற்றும் வாகனம் செலுத்தும் போது சாரதிகளுக்கு ஏற்படும்தூக்ககலக்கம்போன்றகாரணங்களால் இவ்வாறான விபத்துக்கள் சம்பாதிப்பதாகவும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. ஆகையால்தூரபயணங்கள்செல்லும்சாரதிகள் முறையாக நித்திரை கொண்டு வாகனம் செலுத்துவதுடன் மேலதிக சாரதி ஒருவரையும் பயணத்தின் போது இணைத்துக் கொள்வதன் மூலம் விபத்துகளை தவிர்க்கலாம்.

வெளியிடங்களுக்கு சுற்றுலாவுக்காக செல்வோர் பழக்கமில்லாத புதிய வீதிகளில் வாகனம் செலுத்துவது அவதானம் மிக்கது. குறித்த வீதிபற்றிய அனுபவம் உடைய சாரதி ஒருவர் இருப்பதே நல்லது.

இந்நிலையில் நாடளாவிய ரீதியில் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸாரால் விசேட நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளதுடன், மேற்படி திட்டத்துக்கமையசாரதிகளிடையேவிபத்துக்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு தடை கோரி ஆவணம் சமர்ப்பிப்பு

இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரியும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கமால் குணரட்ணவிற்கு எதிராகத் தடைகளை விதிக்கவேண்டும் என கோரும் ஆவணத்தை ஆதாரங்களுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் (ஐடிஜேபி) பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அமைச்சிடம்கையளித்துள்ளது

இது தொடர்பில் ஐடிஜேபி தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் போர் முடிவடைந்ததை குறிக்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தைநாங்கள்நெருங்கிக்கொண்டிருக்கின்ற இந்த தருணத்தில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரி கமல் குணரட்ணவிற்கு எதிராக தடைகளை விதிக்கவேண்டியமைக்கான ஆதாரங்கள் அடங்கிய ஆவணத்தினை மக்னிட்ஸ்கி தடைகளிற்காக பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய சர்வதேவ அபிவிருத்தி அமைச்சிடம் கையளித்துள்ளோம்

கமல் குணரட்ணவுடன் இணைந்து பணியாற்றிய 58வது படைப்பிரிவின் தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிராக பாரிய மனித உரிமை மீறல்களிற்காக அமெரிக்காதடைவிதித்துள்ளதையும்அவரும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்கு செல்ல முடியாது என்பதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

பிரிட்டனும் சவேந்திர சில்வாவிற்கு எதிராக தடைகளை விதித்துள்ளது. 2009 இல் கமால் குணரட்ண சவேந்திரசில்வாவின் கட்டளைதளபதியாகசெயற்பட்ட ஜகத்ஜயசூரிய விற்குஎதிராகபிரிட்டன்தடைகளைஅறிவித்துள்ளதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்.( 2017 இல் லத்தீன் அமெரிக்காவில் சர்வதேச உண்மைமற்றுமநீதிக்கானதிட்டம் இவருக்கு எதிராக சர்வதேசநியாயாதிக்கத்தினை தாக்கல் செய்தது என்பதை சுட்டிக்காட்டியுள்ளோம்.)

(அவுஸ்திரேலியாவிற்கு அவர் பயணம் மேற்கொள்வதை தடுப்பதற்காக குற்றவியல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டதையும் தடைகளிற்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளோம்)

யுத்த கால பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய இவர்களின் தலைமை அதிகாரி கோட்டாபய ராஜபக்சவிற்கு எதிராக கனடா ஏற்கனவே தடைகளை விதித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளோம். மேலும் முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக கனடா தடைகளை விதித்துள்ளதையும், சுட்டிக்காட்டியுள்ளோம் - என்றுள்ளது.

## கூடிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பது குறித்து அரசியல் கட்சிகள் பேச்சு நடத்த ஆரம்பித்துள்ளன. தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிப்பிற்கமைய ஜூன் இரண்டாம் திகதி சபைகள் நிறுவப்பட

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கும், தேசியத்திற்கும் முதலில் குரல்கொடுத்தவர் சுவாமி விபுலானந்த அடிகளே

## காரைதீவில் பேராசிரியர் பாலசுந்தரம் புகழாரம்

( சகாதேவராஜா)

யாழ்ப்பாணத்திற்கென்று ஒருதனியான பல்கலைக்கழகம் வேண்டும் என்றும் முதன் முதலில் குரல் கொடுத்தவர் சுவாமி விபுலானந்த அடிகள். அதேபோன்று தேசியம் பற்றி முதன் முதலில் பேசியவரும் அவரே.



சுவாமி விபுலானந்தர் போல் ஒரு தமிழறிஞர் உலகில் பிறக்கவே இல்லை. அவர் ஓர் அற்புதமான பிறவி.

- இவ்வாறு கனடாவிலிருந்து வருகைதந்த கனடா அண்ணாமலை பல்கலைக்கழக முதல் தமிழ்ப் பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம், தான் பிறந்த காரைதீவு மண்ணில் பேசுகையில் தெரிவித்தார்.

காரைதீவில் பிறந்து தற்சமயம் கனடாவில் வாழ்ந்து வரும் பேராசிரியர் பாலசுந்தரம், 40 வருடங்களுக்கு பிற்பாடு தனது பிறந்த ஊரான காரைதீவு மண்ணுக்கு புதன்கிழமை தனது துணைவியார் பேராசிரியர் விமலாம்பிகையுடன் விஜயம் செய்தார் .

அவருக்கு காரைதீவு விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றம் பாரிய வரவேற்பளித்தது .

முன்னதாக அவர்கள் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர். பின்னர் அடிகளார் பிறந்த இல்லத்தில் விசேட பூசை நடைபெற்று அங்குள்ள அரும்பொருள் காட்சியகத்தை பார்வையிட்டனர்.

பின்னர் மணிமண்டபத்தில் பணி மன்றத் தலைவர் சோ.சுரநுதன் தலைமையில் வரவேற்பு அரங்க நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வில் பேராசிரியர் பாலசுந்தரத்தின் வாழ்வியல் சரிதம் அவரது சேவைகள் சாதனைகள் பற்றி மன்றத்தின் ஆலோசகர் விபுலமாமணி வித்தகர் வி.ரி. சகாதேவராஜா உரையாற்றினார் .

அங்கு பேராசிரியர் பாலசுந்தரம் தம்பதியினருக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

எந்த இனத்திற்கும் வரலாறு முக்கியமானது. துரதிர்ஷ்டவசமாக வரலாற்றை தொலைத்தவர்கள் எமது ஈழத் தமிழர்கள்.

அதனால் இன்று அவர்கள் அநாதையாகவும் நாடில்லாமலும் நாடோடியாக அலைந்து அலைந்து திரிகின்றார்கள் .

1948 சுதந்திரம் பெற்ற பிற்பாடு அந்த வரலாறு செம்மையாகஎழுதப்பட்டிருந்தால் அரசமைப்புகளில் எமக்கென்று அந்தஸ்து கிடைக்கப்பெற்றிருக்கும். 1931 இல் டொனமூர் யாப்பு இலங்கைக்கு பொருத்தமானதா என்று கேட்ட பொழுது அதனை எதிர்த்தவருள் சுவாமி விபுலானந்தர் ஒருவர் .ஏனென்றால் சிறுபான்மைக்கு அதில் காப்பீடு இல்லாமல் இருந்ததே.

மண்ணில் பிறந்த பயனை நாம் செய்த கருமங்களூடாக அடைய முடியும் என்பதை எனது மானசீக குரு சுவாமி விபுலானந்தர் எனக்கு கற்றுக் கொடுத்தார். இறக்கும் தறுவாயிலும் யாழ்நூலை எழுதி முடித்தவர் அவர்.





அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரியராக இருந்த பொழுது தமிழை பாடமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று சொன்னவரும் அவரே. அங்குள்ளவர்கள் அதற்கு முன்னிற்கவில்லை. இந்திய கொடியை பிரித்தானிய சாம்ராஜ்யத்திலே ஏற்றி வைத்த ஒரு துணிவுள்ள வீரர் அவர்.

பதவிக்காக பட்டத்துக்காக புகழுக்காக யார் ஒருவர் நமது தாய் நாட்டை விற்கின்றாரோ அவர் மனிதனே இல்லை .

இதனை உணர்த்தியவர் சுவாமி விபுலானந்தர் .

அவர் வாழ்வில் இனமதபேதம் சாதி வர்க்க பேதங்கள் பார்க்கவில்லை . ஒப்பிலக்கிய ஆராய்வை முதன் முதலில் செய்தவர் சுவாமிகள்.

நமக்கெல்லாம் சிறந்த வழிகாட்டி சுவாமிகள். மொழி சமய வேறுபாட்டை கடந்த அவர் போல் நாங்களும் இயங்கி எமது பாரம்பரியத்தை வளர்க்க வேண்டும்.

40 வருடங்களின் பின் இந்த மண்ணில் கால் பதித்த எனக்கு இவ்வாறான ஒரு பெரிய வரவேற்பு அளித்தமைக்கு எனது குடும்பம் சார்பில் இந்த மன்றத்திற்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன். - என்றார்.

# சாய்ந்தமருது பொலிஸ் பொதுமக்கள் ஆலோசனைக் குழு அங்குராப்பணம்

(நவாஸ்)

சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பிரிவுக்குள் காணப்படும் குற்றச் செயல்களைக் குறைத்து, பொலீஸாரின் கடமைகளை இலகுபடுத்தும் பொருட்டும், பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக ஆலோசனைக்குழு ஒன்றை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் ஆலோசனைக் குழுவின் தலைவர் எம்.கே. இர்ஷாத் கான் தலைமையில் வியாழக்கிழமை திகதி இடம்பெற்றது.

சாய்ந்தமருது பொலிஸ் பொதுமக்கள் ஆலோசனைக் குழுவின் செயலாளர் எம்.எம். உதுமாலெவ்வை ஓய்வு பெற்ற போதனாசிரியர்- வி.ரி.ஏ. அவர்களின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பொலிஸ் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. .இப்னு அஸார் கலந்து கொண்டார். மேலும் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வின்போது சாய்ந்தமருதில் போக்குவரத்துச் சட்டம் மற்றும் சுற்றாடல் மாசுபடுவதை தடுத்தல் தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

விசேடமாக சாய்ந்தமருதில் வீதி ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு ஏனைய பொலிஸ் நிலையங்களின் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு குற்றவாளிகளை அடையாளம்கண்டு தண்டனை வழங்கல், சாய்ந்தமருது ஒஸ்மன் வீதிக்கு விஷேட போக்குவரத்து வழிமுறைகளை கையாளுதல், இரவு நேரங்களில் தேவையற்ற முறையில் வீதிகளில் கூடியிருப்பவர்கள் மற்றும் உலாவித் திரிபவர்கள் தொடர்பில் விஷேட கண்காணிப்பை செலுத்துதல் மற்றும் நள்ளிரவுகளில் திறந்திருக்கும் கடைகள் தொடர்பில் கண்காணிப்புச் செலுத்துதல், சிரமதான நிகழ்வுகளில் ஈடுபடுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் பொதுமக்கள் ஆலோசனைக் குழுவில் இணைத்துக்கொள்ளப்பட்ட பிரமுகர்களுடன் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரும் கலந்து கொண்டனர்.

# தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் ஊர்தி கிளிநொச்சி மாவட்டத்துக்கு வந்தது

தமிழினப்படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக புதன்கிழமை காலை ஊர்திப்பவனியொன்று ஆரம்பமாகியது.



மேற்படி ஊர்தியானது. நேற்று கிளிநொச்சிக்கு வந்திருந்தது. பரந்தன், கிளிநொச்சி நகர் உள்ளிட்ட பகுதிகளில் தரித்து மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம்தற்போதுஇடம்பெற்றுவரும்நிலையில் இந்த ஊர்திப்பவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊர்திபவனி வடக்கை சேர்ந்த ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது.

‘தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும், தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி வேண்டும்’ போன்ற வாசகங்கள் அடங்கியபதாகைகள் மற்றும்இறுதிபோரின் சாட்சியங்கள் குறித்த வாகனத்தில் காட்சி படுத்தப்பட்டுள்ளன.




மேற்படி வாகனபவனி மாவட்டம் தோறும் வீதிகளில் பயணிக்கும் போது பொதுமக்கள் அஞ்சலி செலுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரல்பதிவுதமிழ்த்தேசியமக்கள்முண்ணணி கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தங்கவேல் ஜெகதீஸ்வரன் நிகழ்த்திளார். 316

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய பொறிமுறையின் தேவை

இன்று இலங்கையின் கல்வி அமைப்புகளில் தொடர்ந்து முன்னிலைப் பெற்றுக் கொண்டிருக்கும் நெருக்கடியான விடயம், மாணவியரின் பாதுகாப்பு. மாணவியர் மீதான பாலியல் குற்றங்கள் தொடர்பில் ஆசிரியர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்பது முன்பு எங்கோ எப்போது கேள்விப்படும் செய்தியாக இருந்த நிலைபோய் இப்போதெல்லாம் அடிக்கடி அறியப்படும் செய்தியாக மாறியிருக்கின்றது.

கொழும்பு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 16 வயது மாணவி தில்ஷி அம்சிகா பாலியல் துன்புறுத்தலால் தாக்கம் அடைந்ததற்குப் பின்னர் தற்கொலை செய்த சம்பவம், நாட்டை உலுக்கியது. இது தனிப்பட்ட குடும்பத் துயரமாக அல்ல; மாறாக, கல்வி அமைப்பின் நம்பிக்கையை முற்றிலும் சிதைக்கும் ஒரு சமூகப் பிணையாகும். மாணவியின் உயிரிழப்பு கடந்த சில நாட்களுக்கு முன்னர் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் பெரும் பிரச்சினையாக மாறியது. மக்கள் வீதிகளுக்கு இறங்கிப் போராடினார்கள். இதற்குப் பதிலாக குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியரை பணி இடைநிறுத்தம் செய்தது ஆளும்தரப்பு. அதன் பின்னர் எல்லாமும் அடங்கிவிட்டன.

இந்தச் சிக்கல் ஒரு தனிப்பட்ட பிரச்சினை என்பதைத் தாண்டி, ஒரு சமூகச் சிக்கலாக உருவாகியுள்ளதை ஆளும்தரப்பு புரிந்துகொள்ளவேண்டும். அதற்கான தீர்வை நோக்கி அது முன்னகரவேண்டும். துன்பியல் நிகழ்வாக அதற்கான நடவடிக்கைகள் எதனையும் ஆளும்தரப்பிற்குள் காணமுடியவில்லை.

இன்றைய கல்விக்கழகங்களில் பாலியல் துன்புறுத்தல் என்பது பொதுவான ‘ஆனால் மிக மோசமான’ அனுபவமாக மாணவர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு மாறிவிட்டது. ஆசிரியர்களால், பயிற்சியாளர்களால், சில நேரங்களில் சக மாணவர்களால்மேற்கொள்ளப்படும்இந்தத்துன்புறுத்தல்களுக்கு எதிரான அமைப்புகளின் எதிர்வினை மிகச் சீர்கேடானதாகவே உள்ளது.

பாலியல் புகார் ஒன்றைப் பெற்றவுடன், கல்வி நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைகள் பெரும்பாலும் பின்வட்ட ஆராய்ச்சி, தற்காலிக இடைநீக்கம் அல்லது எச்சரிக்கையைத் தவிர அதிகம் செல்லாது. காலம் செல்லச் செல்ல புகார் அளித்த மாணவியையே குற்றவாளியாகப் பார்க்கும் மனநிலையுடனேயே இந்தப்பொறிமுறைசெயல்படுகின்றது. இச்சூழலில், மாணவிகள் தங்கள் பிரச்சினையை வெளிப்படையாகக் கூறும் மனநிலை குறைவதுடன், தற்கொலை எனும் தீர்வு நோக்கி செல்லும் ஆபத்தும் பெருகுகின்றது.

இலங்கை கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வித்துறை நடவடிக்கைகளை உறுதியுடனும், திட்டமுடனும் எடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாக மாறியுள்ளது. கல்விக் கட்டமைப்புகளில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான நெறிமுறைகள் தெளிவாக வகுக்கப்படவேண்டும். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு ‘பாதுகாப்பு குழு’ அமைக்கப்பட்டு, அதன் உறுப்பினர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு சட்டங்களைப் முழுவதுமாக அறிந்திருக்க வேண்டும்.

மேலும், மாணவர்கள் தங்கள் முறைப்பாடுகளை வெளிப்படையாக தெரிவிக்க முடியும் வகையில் தனிப்பட்ட முறையான மனநல ஆலோசகர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கானபயிற்சிபாடங்களில்பாலியல்விழிப்புணர்வும், மனித உரிமை அடிப்படைகளும் வலியுறுத்தப்படவேண்டும். கல்வி என்பது அறிவு பரப்புவது மட்டுமல்ல, நற்குண அடிப்படையிலும் வளர் பொருள் என்பதையும் மறக்கக்கூடாது.

தில்ஷி அம்சிகாவின் தற்கொலை, இன்னும் எத்தனை மாணவிகள் இத்தகைய துன்புறுத்தலால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கேள்வியை ஏற்படுத்துகிறது. இது சாதாரண சம்பவமல்ல; கல்வி அமைப்புக்கே ஒரு அவமானம். இப்போது அதிர்வலைகள் ஏற்பட்டுள்ள நிலையில், இதையொட்டியாவது ஒட்டுமொத்த மாணவிகளினதும் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இல்லையெனில், கல்விச்சாலைகள் பாதுகாப்பற்ற இடமாகவே மாணவியருக்கு நிலைத்துவிடும்.

இது ஒரு மாணவியின் துயரமல்ல – இது ஒரு சமூகத்தின் தோல்வி. அதைத் சீராக்கவேண்டியது சமூத்தின் கடமை.

# இதுவும் கடந்து போகும்

**என். சத்தியமூர்த்தி**

மீண்டும் ஒரு முறை இனப்போரின் நினைவு நாள். வழமை போலவே, தமிழ் சமூக அமைப்புகள் கஞ்சி ஊற்றுவது போன்ற நிகழ்வுகளை அரங்கேற்றும் சமயம். அது போன்றே, அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வு, போர் குற்றங்கள் மற்றும் பொறுப்பு கூறல் குறித்தெல்லாம் நினைவுகொள்ளும் காலம். ஆனால், கடந்த ஆண்டுகளை வைத்து நோக்கும்போது, இந்த இரு தரப்பினரும் அடைந்த பெருபேறுகள்தான் என்ன?

அவர்களது கோரிக்கைகளுக்கு கொழும்பு அரசோ, ஏன், சர்வதேசமோ செவிசாய்க்கவில்லை. அதற்கான காரண-காரியங்களை ஆராய்வதற்கு அவர்களும் தயாராக இல்லை. அவர்கள் அவ்வாறெல்லாம் சுயமாகச்சிந்தித்து செயல்பட்டுவிடக்கூடாது என்பதில் புலம்பெயர்ந்தோரில் செல்வாக்கு மிக்க குழுவினர் தெளிவாக இருக்கின்றனர்.

இதன் காரணங்களாலும், தமிழ் மக்கள் அரசியல் தீர்வை பெறுவதிலும் காலதாமதம் ஆகிறது. அதற்காக, தமிழர் தரப்பு பேச்சுக்களுக்கு தயார் என்றால், தென்னிலங்கை தரப்புகள் தயாராக இருக்கின்றன என்றல்ல பொருள். உதாரணத்திற்கு, தற்போதைய ஜனாதிபதி அநுரகுமாரா திசநாயக்க, தனது ஐந்து ஆண்டு ஆட்சியில் மூன்றாவது ஆண்டில் தான் தனது தேர்தல் வாக்குறுதியில் புதிய அரசமைப்பு குறித்த முன்னெடுப்புகளை செய்யப்போவதாக கூறிவிட்டார்.

அரசியல் ரீதியாக அநுரவின் ஆளும் ஜேவிபி அணியினர், நாடாளுமன்றம், உள்ளாட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை முடித்துக்கொண்டே அரசமைப்பு சட்டம் குறித்து யோசிக்க இருப்பதாகவே எடுத்துக்கொள்ளவேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற அந்த அணியினர், அண்மையில் நடந்தேறிய உள்ளாட்சி தேர்தலில் சொல்லிக் கொள்ளும்படியான வகையில் வெற்றி பெறவில்லை.

இந்தப் பின்னணியில் மொத்தமுள்ள ஒன்பதில் எத்தனை மாகாண சபைகளில் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பது புரியாத புதிராக மாறிவிட்டது. உள்ளாட்சி தேர்தல் முடிவுகளை அடிமட்டம் வரை ஆராய்ந்து நோக்கினால், சில சமயம் ஏதாவது முடிவு தென்படலாம். ஆனால், அதுவே சரியான முடிவாக அமைய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

இதன் காரணமாகவே, மாகாண சபை தேர்தல்களைப் பின் தள்ளிப்போடும் எண்ணம் அரச தரப்பிற்கு வந்தால், அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. எப்போதோ நடந்திருக்க வேண்டிய மாகாண சபைத் தேர்தல்கள் இது நாள் வரை பின் தள்ளி போடப்பட்டதற்கு காரணம் அதுவே. ஆனால், இந்த முறை யாராவது உச்ச நீதிமன்றத்தை அணுகினால், தேர்தலை தள்ளிப்போடும் விடயம் ஆளும் ஜேவிபி தலைமையின் கடந்த கால அரசியலையும் அரசியல் நிலைபாடுகளையும் கேலிக்குறியாக்கும்.

எது எப்படியோ, உயர் நீதிமன்றம் மாகாண சபை தேர்தல்களை இனியும் பின்தள்ளி போட முடியாது என்று உத்திரவு இட்டால், அதனை இந்த அரசு மீறும் என்று தோன்றவில்லை.

### தொங்கு சபை

இந்தப் பின்னணியில், தமிழ் அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணம் தமிழர்களின் கோட்டை என அறியப்படுவது. தமிழ் அரசியல் ஆளுமைகளின் தலைமையை நாடாளுமன்ற தேர்தலில் ஆட்டிப் பார்த்த அரச தலைமை, உள்ளாட்சி தேர்தலில் பின் தங்கி விட்டது.

தென்னிலங்கையைபோலவே, வடக்கிலும், ஜேவிபி அணியினர் பல உள்ளாட்சி அமைப்புகளிலும் இரண்டாவதாகவே வந்துள்ளனர். தென்னிலங்கையில், ஜேவிபி அணியினர் தவிர்த்த பிற கட்சிகள் அணி அமைப்பு ’தொங்கு சபை’ அமைந்த உள்ளாட்சி அமைப்புகளில் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்கின்றன. இங்கும் அந்த எண்ணவோட்டம் பல்வேறு தமிழ்க் கட்சிகளுக்கு இருந்தாலும், பூனைக்கு யார் மணிகட்டுவது, என்ற அளவிலேயே அவர்களது பேச்சுக்கள் நிற்கின்றன. குறிப்பாகப் பல உள்ளாட்சி சபைகளிலும் முன்னணியில் வந்து தமிழ் அரசு கட்சி, அந்த அமைப்புகளில் எல்லாம், தலைவர் பதவிக்கு தங்களது வேட்பாளரை களமிறக்கப் போவதாக அறிவித்துள்ளது. அது போன்றே, தமிழ் காங்கிரஸ் கூட்டணியும் கூறி உள்ளது. பிற தமிழ் அணிகளும் இது போன்ற நிலையை எடுக்கும் என்ற எதிர்பார்க்கலாம். முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈபிடிபி கட்சி மட்டுமே பதவிகளுக்குப் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

ஊர் கூடி தேர் இழுத்தால் மட்டுமே தமிழர் தரப்பு உள்ளாட்சிகளை கைப்பற்ற முடியும். இல்லை என்று சொல்லாமல், ஜேவிபி அணியினர் தாமாகவே எந்தவொரு அமைப்பிலும் ஆட்சியை கைப்பற்றும் நிலைமை இல்லை. இதனை மட்டுமே காரணம் காட்டி, குறிப்பாக தமிழ் அரசு கட்சி, தான் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளிலும் ’மைனாரிட்டி ஆட்சி’ அமைக்கலாம் என்று கருதிச் செயல்பட்டால் அதன் விளைவுகள் வினையாகவே முடியும்.

### முட்டுக்கட்டை

உள்ளாட்சிக் களேபரங்களுக்கு இடையே, தமிழ் காங்கிரஸ் அணியினர் தலைநகர் கொழும்புவில் வெளிநாட்டுத்தூதுவர்களைச் சந்தித்துத் தமிழர்களின் காணி விடயங்களில் முறைபாடு செய்துள்ளனர். ஏதோ, கடந்த காலங்களில் எல்லாம், இவர்கள் சொல்லி, அவர்கள் கேட்டு, அதனால் தீர்வுகள் கிடைத்தது போல் இன்னமும் தொடர்வது தமிழ் மக்களை முட்டாள்களாக்கும் செயல்.

காணி விடயத்தில், தமிழர் தரப்புகள் ஏன் நாட்டின் நீதிமன்றங்களை அணுகவில்லை என்ற கேள்வி எழுகிறது. அங்கு தமிழர்களுக்கு நீதிகிடைக்காது என்று எண்ணி செயல்படுவது, தவறான அரசியல் தொடர்வதற்கே வழி செய்கிறது. இது போன்ற செயல்பாடுகளை எதிர்த்தும்தான் தமிழ் மக்கள் நாடாளுமன்ற தேர்தலில் வாக்களித்தனர். தற்போது, தமிழ் காங்கிரஸ் தலைமை செய்யும் தவறை பிற தமிழ் கட்சிகளும் தொடருவதில் அர்த்தம் இல்லை.

மாறாக, அவர்கள் தங்களுக்குள்தான் பேசவேண்டும். கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் போக முடியாது. முதலில், உள்ளாட்சி அமைப்புகள் பின்னர் மாகாண சபை ஆகியவற்றை கைப்பற்றுவதற்கு அனைத்து தமிழ் கட்சிகளும் முயலவேண்டும்.

இதில் வெத்துவேட்டுகள் தாமாக ஒதுங்கிக் கொள்ளவேண்டும். அல்லது ஒதுக்கப்படவேண்டும். கடந்த காலச்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இதுவும் கடந்து.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

செயல்பாடுகளை வைத்துக்கொண்டு, இன்றும் தமிழ் அரசியலில் ஆதிக்கம் செலுத்த முயலும் அவர்கள் முக்கிய தமிழ் கட்சிகளுக்கு இடையேயான பேச்சுக்களுக்கு முட்டுகட்டையாகவே இருப்பார்கள்.

## காணாமலே போய்விடும்

அநுர தலைமை எப்போது புதிய அரசமைப்பு குறித்த பேச்சைத் தொடங்க எத்தனிக்கிறதோ, அப்போது தமிழர் தரப்பு ஒருமித்த கருத்துக்களையும் கோரிக்கைகளையும் முன் வைக்க வேண்டும். கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் அந்தக் கோரிக்கைகள் இருக்கும் என்றாலும், அவை குறித்த கருத்துக்கள் நிகழ்காலத்தோடு ஒத்துப்போக வேண்டும்.

சிங்கள தரப்பில் இளைய தலைமுறையினர் என்ன, தமிழ் இளைய தலைமுறையினரே பழங்கதை பேசுவதை விரும்புவதில்லை. அவர்கள் சுயநலவாதிகள் என்று வேண்டுமென்றால் குற்றஞ்சாட்டலாம். ஆனால், அவர்களுக்குத் தேவை உள் நாட்டிலேயே வேலை, அதன் மூலம் குடும்ப வருமானம். இந்த புதிய உண்மையை மனதில் வைத்து தமிழ் அரசியல் தலைமைகள் செயல்படாவிட்டால், அவர்களது தலைமுறைக்குப் பின்னர், அவர்கள் கூறும் 'தமிழ் தேசியம்' காணாமலே போய்விடும்.

தமிழர்களைப் பொறுத்தவரையில், மாகாண அரசுக்கு அதிக அதிகாரங்கள் தேவை. தென்னிலங்கைத் தரப்பினரை பொறுத்த வரையில் பெருவாரியினர் நிறைவேற்று ஜனாதிபதி அமைப்பு இல்லாமல் ஆக்கப்பட வேண்டும் என்பதில் தீர்மானமாக இருக்கிறார்கள். ஆனால் பதவிக்கு வருவதற்கு முன்னர் அது குறித்தெல்லாம் பேசி வந்த அநுர தரப்பு இப்போது வாய்மூடி மௌனியாய் இருப்பது கேள்விகளை எழுப்புகிறது.

எது எப்படியோ, இதே முடிவுகளைத்தான் பதிமூன்றாவது திருத்தமும் சொல்லாமல் சொன்னது. அதனை தென்னிலங்கை அரசுகள் சரிவர செயல்படுத்தாததால் அது தவறு என்றல்ல பொருள். மாறாக, அதன் காரணமாகவே, தமிழ் தரப்புகள் அதனை பிடித்துக்கொண்டு நின்றிருக்கவேண்டும்.

விடுதலைபுலிகள் அமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை என்ற ஒரே காரணத்திற்காக பதிமூன்றாவது திருத்தத்தை இன்னமும் எதிர்ப்பது விவேகம் அல்ல. எது எப்படியோ, தமிழர்களை பொறுத்தவரையில், மீண்டும் அரசமைப்பு குறித்த சர்ச்சைகள் என்று தொடங்காமல், முதலில் பதிமூன்று உறுதி செய்த அதிகாரங்களை பெற்றுக்கொள்ள நீதி மன்றங்கள் மூலம் முயலவேண்டும் அதே சமயம், அந்த அதிகாரங்களை செயல்படுத்தவும் தங்கள் தலைமைகளைத் தயார்படுத்தவேண்டும்.

2013- முதல் 2018 காலகட்டத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன்தலைமையிலானஅரசின்செயல்பாட்டு இலட்சணத்தைதான் பார்த்தோமே. அல்லாது, இப்படியே தொடர்ந்தால், மதம் மற்றும் மனம் சார்ந்த தத்துவவாதிகள் கூறுவது போல். 'இதுவும் கடந்து போகும்.'







# கதிர்காம ஆடிவேல்விழா உற்சவ திகதி முறைப்படியாக அறிவிப்பு

## ஜூன் 26 ஆரம்பம் ஜூலை 11 தீர்த்தம்

(சகாதேவராஜா)

கதிர்காமகந்தன் ஆலயவருடாந்த ஆடிவேல் திருவிழா திகதி உத்தியோகபூர்வமாக ருகுணு மகா கதிர்காம தேவாலய நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான கதிர்காமம் ஆலயத்தின் வருடாந்த அசல பெரஹெரா ஆடிவேல் திருவிழா - அசல் பெரஹரா ஜூன் 26ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 07 ஆம் தேதி தீமிதிப்பு வைபவம் இடம் பெற்று, ஜூலை 10ஆம் திகதி மஹா பெரஹெரா இடம்பெற்று, ஜூலை 11ஆம் திகதி காலை மாணிக்கங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் அதாவது தீர்த்தத்துடன் நிறைவடையும்.

உண்மையில் மேற்கூறப்பட்ட சடங்குகள் தினங்கள் பௌத்த பாரம்பரிய முறைப்படி தீர்மானிக்கப்பட்டது.

சைவ முறை அல்லது இந்துக் கோயில் என்ற ரீதியில் நோக்கினால் கதிர்காம ஆடிவேல் விழா உற்சவம் ஆடி மாதத்தில் வரவேண்டும். ஆனால் இங்கு இவ் வருட உற்சவம் ஆனி மாதத்தில் வருகிறது.

எனவே ஆடிவேல் விழா என்று அழைப்பது பொருத்தமாக இருக்குமா என்பது வினாவாகும். அப்படி எனின் ஆனிவேல் விழா என்று அழைக்கலாமா? என்பதும் சைவர்களின் அடுத்த வினாவாகும்.

இதேவேளை யாழ்.செல்வச்சந்நதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகிய ஜெயா வேல்சாமி தலைமையிலான மிக நீண்ட 59





நாள் பாதயாத்திரை நேற்று 16 வது நாள் திருமலை மாவட்டத்தை புல்மோட்டையை வந்தடைந்துள்ளது.

ஜூன் மாதம் 26ஆம் திகதி கதிர்காமத்தை சென்றடையும் எனத் தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.

# நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்.

(ஹாரீஸ்)

2025 ஆம் ஆண்டுக்கான நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேசஒருங்கிணைப்புகுழுத்தலைவருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் புதன்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமா லெப்பை, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன், உதவி பிரதேச செயலாளர் பே. பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தி. கிருபைராஜா, நிருவாக கிராம உத்தியோகத்தர் மனோஜ் இந்ரஜித், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் செ. சிவம் ஆகியோரும் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பல்வேறு துறைசார் நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் நாவிதன்வெளி பிரதேசசெயலக வெளிக்கள உத்தியோத்தர்களும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்திக்கான விடயங்கள் மற்றும் பிரதேசத்தில் காணப்படும்







பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுத்தல் போன்ற பல விடயங்கள் கலந்தாராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணொருவரின் சடலம் ஓட்டமாவடிபகுதியில் மீட்பு

(பர்ஸான்)

தனது வீட்டில் வசித்து வந்த பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இறப்பு நேற்று (வியாழக்கிழமை) காலை வேளையில் தெரியவந்துள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி முதலாம் வட்டாரம் பஸார் பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த 55 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த மரணச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உபநயனதீட்சை வழங்கும் நிகழ்வு

(சகாதேவராஜா)



கிழக்கிலங்கையின் பிரபல சிவாச்சாரியாரும் காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வர் ஆலய பிரதம குருவுமான சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்களின் கனிஷ்ட புதல்வன் ம. லம்போஜிகன் ஐயாவிற்கு உபநயன தீட்சை (பூநூல் அணியும் நிகழ்வு) நேற்று முன்தினம் ஆலயத்தில் நடைபெற்றது .

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தனது கனிஷ்ட புதல்வன் லம்போஜிகனுக்கு இந்த உபநயன தீட்சையை வழங்கினார்.

அத்தருணம் சிவஸ்ரீ சபா.கோவர்த்தன சர்மா உள்ளிட்ட சிவாச்சாரியார்கள் குடும்பத்தினர் ஆலய பரிபாலன சபையினர் உறவுகள் கலந்து கொண்டார்கள்.

ஒரு தந்தை மகனுக்கு உபநயன தீட்சை செய்தமை காரைதீவு வரலாற்றில் முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கார் விபத்து

(கேதீஸ்)



நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் தலவாக்கலை லோகி மல்லியப்புச் சந்தியில் கார் ஒன்று வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை நோக்கி பயணித்த கார் ஒன்றே இவ்வாறு வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.



இவ்விபத்தில் காரின் சாரதி மற்றும் அதில் பயணம் செய்த ஒருவரும் சிறுகாயங்களுக்குள்ளாகினர்.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வவுனியா மாநகர போனஸ் ஆசனம் யாருக்கு?

## கூட்டணிக் கட்சிகளுக்குள் குழப்பம்

வவுனியா மாநகர சபையில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் போனஸ் ஆசனம் யாருக்கு என பங்காளிக் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு 3 ஆசனங்கள் கிடைத்த நிலையில், ஒரு போனஸ் ஆசனம் பெண் ஒருவரை நியமிப்பதற்கு கிடைத்திருந்தது. குறித்த முதலாவது போனஸ் ஆசனம் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவிற்கு என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தற்போது மாநகரசபையின் போனஸ் ஆசனத்தை தமக்கு தருமாறு புளொட் கோரியுள்ளது. மாநகரசபையில் வட்டாரம் வென்ற புளொட் 2 உறுப்பினர்களையும், ஈபிஆர்எல்எப்ஜர் ஆசனத்தையும்கொண்டுள்ள நிலையில் தற்போதைய போனஸ் ஆசனத்தையும் புளொட் கோரியுள்ளது என ரெலோ தெரிவித்துள்ளது.

அதற்கு ரெலோ மறுப்பு தெரிவித்துள்ளது. எனினும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் செயலாளர் புளொட் அமைப்பாகஇருப்பதால்அவர்களின்ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. இதனால் ரெலோ தரப்பு குழப்ப நிலையில் உள்ளதாகவும், விரைவில் கூடி கதைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, குறித்த கூட்டணிக்குள் மேயர் தெரிவு மற்றும் போனஸ் ஆசனம் தொடர்பில் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 100

# காத்தான்குடி நகரசபைக்கு தவிசாளர் பெயரிடப்பட்டார்



(நூருல் ஹுதா உமர்)

காத்தான்குடி நகர சபையின் தவிசாளராகவும், பிரதித் தவிசாளராகவும் முறையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த எஸ்.எச்.எம்.அஸ்பர், எம்.ஐ.எம். ஜெஸீம் ஆகியோரை நியமித்துள்ளதாக கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி , நாடாளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்துள்ளார்.

தவிசாளருக்கான நியமன கடிதத்தை அவர் ஷாஹுல் ஹமீத் முஹம்மத் அஸ்பருக்கு கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோரின் முன்னிலையில் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் புதன்கிழமை மாலை கையளித்தார்.

இத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தியைத் தவிர, தனிக்கட்சியாக 50 சதவீதத்தை கடந்து இந்த உள்ளூராட்சி சபையைக் கைப்பற்றியுள்ள கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

# தொழிலிடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் வேண்டும்

## பிரதமர் வலியுறுத்து

தொழில்களில்ஈடுபடும்பெண்களின்பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், தொழிற்செய்யும் இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கண்டி கரலிய மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அகில இலங்கை தாதியர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச தாதியர் தினம் - 2025 நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

தாதியர் தொழிலை அறிமுகப்படுத்திய புளோரன்ஸ் நைட்டிங்கேலின் 205ஆவது பிறந்தநாளை முன்னிட்டும், உலகம் முழுவதும் தாதியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாட ஒரு மன்றத்தை உருவாக்கும் நோக்குடனும், 'எமது தாதியர் எமது எதிர்காலம் – தாதியர்களைப் பாதுகாப்பது பொருளாதாரத்தை பலப்படுத்துகிறது' என்ற கருப்பொருளின் கீழ் இவ்வருடசர்வதேசதாதியர்தினம்அனுஷ்டிக்கப்பட்டது.

தாதியர் தொழில் தொடர்பாக எழுதப்பட்ட 'ஹெதகம' சஞ்சிகையை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ ஆகியோருக்கு வழங்கி வைக்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவித்ததாவது:

தாதியர்களாக நீங்கள் சுமந்திருக்கும் பொறுப்பு மற்றும் உங்கள் சேவையைப் பற்றி சிந்திக்க இன்று நம் அனைவருக்கும் ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது.

அண்மையில் கரண்டிஎல்ல பகுதியில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்தவர்களை பார்வையிட போக்குவரத்து அமைச்சரும் நானும் கம்பளை மருத்துவமனை மற்றும் பேராதனை மருத்துவமனைக்குச் சென்றோம். நான் ஒரு மருத்துவமனைக்குச் செல்வது இது தான் முதல் முறை இல்லை என்றாலும், ஒவ்வொரு முறை அங்கு செல்லும் போதும், எங்கள் தாதியர்கள் வழங்கும் அர்ப்பணிப்பு மற்றும் சேவையைப் பார்த்து நான் வியப்படைகிறேன். எனது தாயார் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, தாதியர்களின் அர்ப்பணிப்பை நான் நேரில் கண்டேன்.

கம்பளைமற்றும்பேராதனைமருத்துவமனைகளில் உள்ள அந்த தாதியர் சகோதர சகோதரிகளிடம் நான் உரையாடினேன். தாதியர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் எனக்கு மிகவும் தெளிவாகத் தெரிந்தன. ஒரு தாதி, தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் இரவுப் பணிகளில் ஈடுபட்டதாகக் கூறினார். அப்போது அவரது குடும்பம் எங்கே என்று நான் கேட்டேன், அந்த சகோதரி சிரித்தார், ' குடும்பத்தைப் பற்றி சிந்திக்கக்கூட நேரமில்லை.' பிள்ளைகளை அவரது தாயார் கவனித்துக்கொள்கிறார்கள், அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவை செய்கிறார்கள், அவர்கள் தங்கள் கணவரை கடைசியாக எப்போது பார்த்தார்கள் என்பது அவர்களுக்கு நினைவில் இல்லை.

உண்மையில் இவ்வாறு வேலை செய்வது எவ்வாறான நிலை? எல்லாம் சரியாக இருக்கும் சூழ்நிலையில் அல்ல நாங்கள் வேலை செய்வது. வீழ்ந்து, சரிந்துபோயுள்ள ஒரு முறைமையை மீண்டும் கட்டியெழுப்பும் சூழ்நிலையில் நாம் இருக்கிறோம்.

தாதியர் தொழிலில் 95 சதவீதம் பேர் பெண்கள். இது பெண்களுக்கு மட்டுமே பொருத்தமான ஒன்று என்றோ அல்லது பெண்கள் மட்டுமே செய்யும் ஒனறு என்றோ நான் நினைக்கவில்லை. நூற்றுக்கு 95 சதவிகிதத்தினர் எப்படிப் பெண்களாக மாறினர் என்பதைப் பற்றி நாம் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். பெண்களாகிய எமக்கு இயற்கையான திறமை ஏதாவது இருக்கிறதா என்றும் நான் சிந்தித்தேன்.

எந்தவொரு வேலையிலும் தொழில் பாதுகாப்பு பற்றிப் பேசும்போது, அது வெறும் சம்பளத்தைப் பற்றியது மட்டுமல்ல. பெண்கள் பணிபுரிய பாதுகாப்பான சூழல் மற்றும் தொழிற் சூழலில் பாதுகாப்பு குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும். பல்வேறு காரணங்களால் தொழிற்சூழல் பாதுகாப்பற்றதாக மாறும் நேரங்கள் உள்ளன. பெண்கள் பெரும்பாலும் இரவு நேர வேலைகளில் ஈடுபடவேண்டியகட்டாயத்தில்உள்ளனர், தொலைதூர இடங்களில், போக்குவரத்து குறைவாக உள்ள இடங்களிலும், தங்களை விட சக்திவாய்ந்தவர்களால் அழுத்தங்களுக்கு உள்ளாகும் இடங்களிலும் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதுபோன்ற சூழ்நிலைகளில் உங்கள் பாதுகாப்பை உறுதி செய்வது மிகவும் முக்கியம் என்று நான் நினைக்கிறேன்.

மேலும், ஒரு பெண்ணாக, நீங்கள் உங்கள் தொழில் மற்றும் குடும்ப வாழ்க்கையை சமநிலைப்படுத்த வேண்டும். அதற்கு, தேவையான சமூக சூழலும் வசதிகளும் தேவை. பெண்களாக நாம் எடுக்கும் பொறுப்புகளை நிறைவேற்ற நாம் என்ன வசதிகள் மற்றும் ஆதரவை வழங்குகிறோம் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். வாழ்க்கை என்பது பணம் மட்டுமல்ல, அது எல்லாவற்றையும் உள்ளடக்கியது, மகிழ்ச்சி மற்றும் ஆறுதல். அத்தகைய வாழ்க்கையை அடையக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்க நாங்கள் முயற்சிக்கிறோம். கடினமான தெரிவுகளை எடுக்காமல், எளிதான வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு சமூகத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

இந்த தாதியர் தின கருப்பொருள் உரை பொருளாதாரத்தை வலுப்படுத்தும் தாதியர்களைப் பற்றி குறிப்பிடுகிறது. ஆனால் நடக்க வேண்டியது என்னவென்றால், தாதியர்களை வலுப்படுத்தும் ஒரு பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். மக்கள் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான கருவிகளாக மாறினால், நாம் எப்படி எளிதான வாழ்க்கையை வாழ முடியும்? பொருளாதாரத்தை வலுப்படுத்துவதும், அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் மற்றும் வசதிகள் உள்ள ஒரு சமூகத்தை உருவாக்குவதும் அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இந்நிகழ்வில்உரையாற்றியசுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

எமது வைத்தியசாலை முறைமையில் வெளிநோயாளிகள் பிரிவு, வெளிநோயாளிகளின் எண்ணிக்கையைச் ஈடுசெய்ய சிரமப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 120 மில்லியன் மக்கள் வருகிறார்கள். மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை வைத்தியசாலை நிலைகளைத் தாண்டி, ஆயிரம் ஆரம்ப வெளிநோயாளர் பிரிவுகளை உருவாக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

உலகில் வேகமாக வளர்ந்து வரும் முதியோர் சனத்தொகையைக் கொண்ட நாடாக இலங்கை உள்ளது, இது எதிர்காலத்தில் 25சதவீதத்தை எட்டும். அந்த மக்களை மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்குப் பதிலாக, அவர்களை அங்கேயே பராமரித்து அவர்களின் உடல்நிலையைக் கண்காணிக்க தேவையான வசதிகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

எங்கள் அடுத்த இலக்கு தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதாகும். எங்கள் மருத்துவமனைகளின் படுக்கை வசதி மிகப் பெரியது. உங்கள் சேவைகளை மட்டுமே பெற்று ஆரோக்கியமான பிரஜைகளை உருவாக்குவது கடினம், எனவே இந்த ஆண்டு 3,147 தாதியர் நியமனங்களை வழங்க நாங்கள் நடவடிக்கைஎடுத்து வருகிறோம். இணை சுகாதார பட்டதாரிகளையும் மீதமுள்ள 305 தாதியர் அதிகாரிகளையும் ஆட்சேரப்புச்செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பிரதமர் அலுவலகத்தின் வெற்றிடங்கள் சம்பந்தமான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செய்யப்படுகின்றன.

தற்போதுள்ள தாதியர்களின் எண்ணிக்கையை 40,000 லிருந்து 60,000 ஆக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்று மாதங்களுக்குள் தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பை முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தாதியர் பட்டம் வழங்குவது தொடர்பாக பிரதமரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது நாங்கள் சில முடிவுகளை எடுத்தோம். சுகாதார அமைச்சு மற்றும் உயர்கல்வி அமைச்சுடன் இணைந்து, தாதியர் பட்டங்களை முறையான முறையில் வழங்க நாங்கள் தற்போது திட்டமிட்டுள்ளோம்.

சுகாதார மற்றும் ஊடகத்துறை பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணை சுகாதார பீடத்தின் பேராசிரியர் தமயந்தி தசநாயக்க, அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் ரவீந்திர கஹந்தவ ஆரச்சி, சுகாதாரத் துறை அதிகாரிகள் மற்றும் தாதியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம்





(சினீஸ் கான்)

நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் திருமதி ஆர்.ராகுலநாயகி அவர்களின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா தலைமையில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை மற்றும் திணைக்களங்களின் தலைவர்களும் உயர் அதிகாரிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## கூடிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அவ்வாறு நிறுவும் போது தனி கட்சியாக அதிகூடிய ஆசனங்களுடன் வெற்றி பெற்றுள்ள கட்சிக்கு ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

50 சதவீதத்தைப் பெற்றுக் கொள்ளா விட்டாலும், தனிக் கட்சியொன்றிலிருந்து பெரும்பாலான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ருந்தால்அந்தக்கட்சிக்குசபைகளை நிறுவுவதற்கு வாய்ப்பளிப்பதே சிறப்பாகும். மாறாக எதிர்க்கட்சிகள், சுயாதீனக் குழுக்கள் கூட்டணியமைத்து சபைகளை நிறுவினால் 4 ஆண்டு காலமும் முரண்பாடுகளிலேயே சென்று விடும். அங்கு அபிவிருத்தி திட்டங்களுக்கு வாய்ப்பிருக்காது.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என இல்லை. அனைவரும் ஒரு குழுவாகமக்களுக்குசேவையாற்றவேண்டும். அவ்வாறிருக்கையில் எதற்காக இவ்வாறு முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன? ஆளும்தரப்பைப் பலவீனப்படுத்த வேண்டுமெனில், ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமெனில்அதற்கானநடவடிக்கைகளை நாடாளுமன்றத்தினூடாக எடுக்க முடியும்.

உள்ளூராட்சிமன்றங்கள் என்பவை அவ்வாறான நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கானவை அல்ல. எனவே பெரும்பான்மை இல்லாவிட்டாலும் ஓரளவு வெற்றியைப் பெற்றுள்ள தரப்பினருக்கு ஆட்சியமைப்பதற்கு இடமளிக்குமாறு வலியுறுத்துகின்றோம். சுயாதீனகுழுவொன்று வெற்றி பெற்றிருந்தாலும் தேசிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் சக்தியும் அவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்றார்.

## உயிரோடு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 16 வருடங்களாக நீதிக்காகப் போராடி வருகிறோம். நாம்கடந்த2017ஆம்ஆண்டுபெப்ரவரி 20 முதல் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறோம். எமது போராட்டம் 3000 நாட்களைக்கடந்துள்ளது. எம்முடன்போராட்டத்தில் பங்கேற்ற நூற்றுக்கணக்கான பெற்றோர்கள், காணாமல்போன தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமலே உயிரை விட்டுவிட்டார்கள்.

உண்மையையும், நீதியையும் கோரி போராட்டத்தை முன்னெடுத்த இக்காலப்பகுதியில் இலங்கை ஆளும்தரப்பு சர்வதேச சமூகத்தை எவ்வாறு ஏமாற்றி வருகிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறோம். இருப்பினும் அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பிரிட்டனால் முன்மொழியப்பட்டு, 60 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட 60/1 தீர்மானம் எமக்கு புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையை அளித்திருக்கிறது.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டி ஆவணப்படுத்துவதற்கு இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கு வழங்கப்பட்ட 3 வருடகால ஆணை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்குவரும் நிலையில், அப்பொறிமுறையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மிகமுக்கியமான பணியை இப்போது நினைவுகூருகிறோம். எம்முடன் தொடர்புடைய ஆதாரங்களைத் திரட்டி, அவற்றைப் பாதுகாக்கும் அவர்களது முயற்சி இன்றியமையாததாகும். எனவே இந்த ஆணையை மேலும் காலநீடிப்பு செய்வது எமக்கான ஆதரவையும், உடன்நிற்பையும் வெளிக்காட்டும் நடவடிக்கையாக அமையும் என நாம் கருதுகிறோம்.

அதேபோன்று இறுதிக்கட்டப்போரின்போது நிகழ்த்தப்பட்ட மிகமோசமான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் வகையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஊடாக இலங்கையைசர்வதேசகுற்றவியல்நீதிமன்றத்தில் பாரப்படுத்தவேண்டும்.

இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறையின் பணியைத் தொடர்வதற்கும், வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் செயற்திறன்மிக்க சர்வதேச விசாரணையை முன்னெடுத்து, குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும்ஏற்றவாறானதீர்மானமொன்றை நிறைவேற்றவேண்டும்.

இலங்கையின் உள்ளகப்பொறிமுறையானது பலதசாப்தகாலமாகநீதி மற்றும்பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தவறியிருக்கிறது. மாறாக நாம் இன்னமும் தொடர் இராணுவமயமாக்கல், சட்டவிரோத காணி அபகரிப்பு, தண்டனை விலக்கீடு, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மறுப்புஎன்பவற்றுக்குமுகங்கொடுத்துவருகிறோம். எனவே எமக்கான அர்த்தமுள்ள நீதியைப் பெற்றுத்தருவதற்கு சர்வதேச சமூகம் ஆக்கபூர்வமான முறையில் செயலாற்றவேண்டிய தருணம் இதுவாகும்.

எம்மில் 90 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் வயது முதிர்ந்த தாய்மார்களாவர். நாம் இன்னும் எவ்வளவு காலம் உயிருடன் இருப்போம் என்று தெரியவில்லை. இருப்பினும் நாம் உயிருடன் இருக்கும்போது எமக்கான நீதி கிடைக்கப்பெறவேண்டும் என விரும்புகிறோம். ஆகவே எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை ஒரு நம்பத்தகுந்த சர்வதேச நீதிப்பொறிமுறைக்கு முகங்கொடுப்பதை உறுதிசெய்யக்கூடியவாறான தீர்மானமொன்றை நிறைவேற்றுமாறு உங்களிடம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனப்படுகொலை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்புவீர்களாக இருந்தால், சர்வதேச சுயாதீன குற்றவியல்விசாரணையைஎதிர்கொள்வதற்கும், இலங்கை அரசு எவ்வித குற்றத்திலும் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்கும் எதற்காக அஞ்சுகிறீர்கள்?'' எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதுமாத்திரமன்றி ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திட்டு, அதனூடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஏன் இடமளிக்கவில்லை எனவும் அவர் வினவியுள்ளார்.

மேலும் "உண்மைக்கு இலங்கை அஞ்சுகிறது என்பதே யதார்த்தமாகும். உண்மையின் ஊடாக மாத்திரமே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பமுடியும். இருப்பினும் முன்னைய ஆளும்தரப்புக்களைப் போன்றே உங்களது ஆளும்தரப்பும் அதனைத் தொடர்ந்து நிராகரித்து வருகிறது"என்றும்கஜேந்திரகுமார்பொன்னம்பலம் விசனம் வெளியிட்டுள்ளார்.

## கடன்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளநிதியமைச்சு, பிரான்ஸ்மற்றும் ஜப்பானுடன் இணைந்து உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவுக்கு இணைத் தலைமை வகித்ததன் ஊடாக இலங்கையின் கடன்மறுசீரமைப்புசெயன்முறையில்இந்தியா முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ளது.

# தேவாலயத்திற்கு கதிரைகள்

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேசத்தில் பல்வேறு சமூக பணிகளை செய்து வரும் மஹ்திய பவுன்டேஷன் நிறுவன நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மிலால் உச்சமுனை கத்தோலிக்க தேவாலயத்திற்கு ஒரு தொகை பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன.



வெற்றி பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஏ.ஆர்.எம் முஸம்மிலை வரவேற்க்கும் முகமாக உச்சமுனை மீனவ மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தின் போது உச்சமுனை கத்தோலிக்க தேவாலயத்திற்கு மஹ்தி பவுன்டேஷன் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மிலினால் தேவாலயத்தின் பங்குதந்தையிடம் கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டமையும்குறிப்பிடத்தக்கது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கற்பிட்டி பிரதேச சபைக்கு உறுப்பினராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக தலைமை வேட்பாளராக பள்ளியாவத்தை வட்டாரத்தில் முதன் முறையாக மஹ்தி பவுன்டேஷன் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மில் போட்டியிட்டார்.

இவர் கடந்த 22 வருடமாக இதே வட்டாரத்தில் பல்வேறு கட்சிகளுக்கும் தாவி வளம் வந்து கொண்டிருந்தவரும் இம்முறை ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட முன்னாள் உறுப்பினரை தோற்கடித்து வரலாறு படைத்து






காலைக்கதிர் Kalaikkathir

# அக்கரைப்பற்றில் சுனாமியினால் பாதிப்புற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(பாறுக் ஷிஹான்)

சுனாமிப் பேரலை தாக்கி 20 வருடங்கள் கடந்துவிட்டன. இலங்கையில் பாதிப்புற்ற அனைத்து பிரதேசங்களிலும் பாதிப்புற்றோர்களுக்கு நியாயமான அடிப்படையில் இழப்புகள் ஈடுசெய்யப்பட்டுவிட்டன. குறிப்பாக சுனாமி பாதுகாப்பு எல்லைக்குட்பட்டவர்களுக்கு அந்தந்த பிரதேசங்களில் பாதுகாப்பான இடங்களில்குடியிருப்புக்கானவீடமைப்புக்கள் நிர்மாணித்து வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அக்கரைப்பற்று பிரதேசத்தில் மாத்திரம் நுரைச்சோலை அரச காணியில் அமைக்கப்பட்ட வீடுகளை சுனாமியால் பாதிப்புற்றுவீடுகள்முழுமையாகசேதமடைந்த மக்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என அக்கரைப்பற்றில் சுனாமியினால் பாதிப்புற்றோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நேற்று கல்முனை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை செய்வதற்கு வருகைதந்த பாதிப்புற்றோர் சங்கத் தலைவர் ஐ.எல்.ஏ. குத்தூஸ் கூறுகையில் -

15 வருடங்களுக்கு முன்னர் வீடமைப்பு அமைச்சராக இருந்த திருமதி பேரியல் அஷ்ரஃப் அவர்களுடைய அயராத முயற்சியில் எங்களுக்காக சவூதி நாட்டு நிதியினைக் கொண்டுவந்து நிர்மாணித்து முடிக்கப்பட்ட இந்த வீடுகளை வழங்க ஆயத்தமானபோது. பேரினவாதங்கொண்ட சிலஇனவாதிகளாலும், இன்னும் சிலருடைய சுயநல அரசியல் இலாபங்களுக்காகவும் அக்கரைப்பற்று மக்களுக்கு இந்த வீடுகளை வழங்கக்கூடாது என திட்டமிட்டு தடுக்கப்பட்டது.

நடந்த அநியாயங்கள் அனைத்தையும் கண்முன்னே கண்டு அனுபவித்த நான் உட்பட பலர் அவற்றிற்கு சாட்சி என்று கண்கலங்கியவராக கூறினார்.

தொடர்ந்து கூறும்போது இதனை மேலும் தடை செய்ய சிலரால் உச்சநீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன், அதில் தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.அவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்பு இருப்பதனால் வீடுகளை வழங்க முடியாதுள்ளது என மாவட்ட அரசாங்க அதிபர் முதல் உயர்மட்ட அதிகாரிகளும், மாறி மாறி ஆட்சி செய்த ஆட்சியாளர்களும் கூறிவருகின்றனர்.புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்று முதன் முதலில் கூறியது நுரைச்சோலை வீடுகள் பாதிப்புற்ற மக்களுக்கு உடனடியாக வழங்கப்படும் என்று,அவ்வாறு கூறி ஆறு மாதங்கள் தாண்டிவிட்டது. அவர்களும் அதைச் செய்யவில்லை. இதற்கு தீர்வை யார்தான் வழங்குவது என தமது துயரை கூறினார்.

இந்த பணிகளில் பாதிப்புற்ற மக்களுக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் ஏடிஏஎல்ஆர் இணைப்பாளரும், மனித எழுச்சி நிறுவனத்தின் பணிப்பாளருமான கே. நிஹால் அஹமட் அவர்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வருகை தந்திருந்தார்.

அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

அம்பாறை மாவட்டத்தில் காணி, வீட்டு உரிமைகளுக்காக நீண்டகாலமாக போராடிவரும்காணிஉரிமைக்கானஅம்பாறை மாவட்ட செயலணியில் தீர்வு வேண்டிய போராட்டத்தில் இணைந்திருப்பவர்களில் இப் பிரச்சினையில் பாதிப்புற்றோர்களும் உள்ளார்கள். குறிப்பாக அவர்களுடைய பிரதிநிதிகளாக அதன் தலைவர் குத்தூஸ், மற்றும்சுபைறா அவர்களுடனான பிரதிநிதிகள் முறைப்பாட்டினை ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளார்கள்.

இந்த உரிமைக்காக நீண்டகாலமாக ஏ.டி.ஏ.எல்.ஆர் பல முயற்சிகளையும் செய்து வருகின்றது.கடந்த சுனாமி 20 ஆண்டு நினைவு நாளன்று இவர்களுடன் நானும் சென்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை நேரில் சந்தித்து எமது கோரிக்கையினை வழங்கி பேசினோம்.

**அரசாங்க அதிபர் தனது நிலைப்பாட்டை தெரிவிக்கையில் -**

ஜனாதிபதி அவர்கள் என்னை கொழும்பிற்கு அழைத்து நேரில் சந்தித்து வீடுகளை வழங்குவது தொடர்பில் விசாரித்தார் என்றும்,அதன்போது உச்சநீதிமன்ற தீர்ப்பில் உள்ள சிக்கல்கள் தொடர்பில் பேசினார் எனக் கூறினார். அதில் குறிப்பாக உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி தேசிய கொள்கை அடிப்படையில் இந்த வீடுகளைப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் உள்ள சிக்கல்களாலேயே இதனை வழங்க முடியாமல்உள்ளதாகஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களிடம் தெரிவித்ததாக கூறினார்.

**நிஹால் அவர்கள் மேலும் கூறும்போது -**

உண்மையிலேயே இலங்கையில் தேசிய காணிக் கொள்கை ஒன்று இல்லை. நாட்டு பிரஜைகளுக்கு நிலப் பிரச்சினைகள் இந்தளவு அதிகரிக்க பிரதானமான காரணிகளில் அதுவும் ஒன்றாகும். தேசிய காணிக் கொள்கையை உருவாக்க வேண்டும் என்று நீண்ட காலமாக பல சிபாரிசுகளை நாம் அரசுக்கு வழங்கி வந்துள்ளோம்.

கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி கல்முனைப் பிராந்தியத்திற்கு களவிஜயத்தினை மேற்கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி கிஹாண் குணதிலக அவர்களுடைய தலைமையிலான குழுவைச் சந்தித்த எமது யுனுயுடுசு பிரதிநிதிகள் முன்வைத்து



கலந்துரையாடிய பிரச்சினைகளில் இந்த சுனாமி வீட்டுத்திட்டம், கரும்பு விவசாயிகளின் பிரச்சினைகளும் குறிப்பிடத்தக்கது.

**குறிப்பாக வீட்டுப் பிரச்சினையினை முழுதாக கேட்டறிந்த ஆணையாளர்,**

15 ஆண்டுகளுக்கும் அதிகமாக நடைமுறைப்படுத்த முடியாது உள்ள தீர்ப்பு ஒன்று தொடர்பில் உச்சநீதிமன்றத்திற்கு பரிந்துரை ஒன்றினை எழுதிக் கோரும் இயலுமை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு உண்டு. எனவே பாதிப்புற்ற மக்களுடைய முறைப்பாடு இருக்குமிடத்து ஆணைக்குழுவால் குறித்த நடவடிக்கையை எடுக்கமுடியும்'என தெரிவித்தார்,

அந்த அடிப்படையில், சுனாமியால் பாதிப்புற்று இதுவரை வீடுகள் கிடைக்காதவர்களும், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் சுனாமி வீட்டுத்திட்டப் பயனாளிகள் பட்டியலில் உள்ளவர்களில் 78 பேர்கள் ஒப்பமிட்ட முறைப்பாட்டினை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய அலுவலகத்தில் இணைப்பாளர் அப்துல் அஸீஸ் அவர்களிடம் பாரமளித்துள்ளோம்.

இந்த முறைப்பாடு தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஆணைக்குழு விரைவாக எடுக்கவேண்டும் என்பதனையும் பணிவாக வேண்டிக் கொள்கின்றோம் எனக் கூறினார்.இந்த அடிப்படையில் பாதிப்புற்ற மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். அதன் மூலமாகவே நாட்டை நேசிக்கும், இனவாதமற்ற நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு இணைந்து பாடுபடும் பிரஜைகள் உருவாகுவார்கள் என்பதை யாவரும் உணரவேண்டும்.



# தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் இடமில்லை

## வைத்தியர் சத்தியலிங்கம் எம்.பி ஆவேசம்

எமக்கோ தமிழ் தேசியக் கட்சிகளுக்கோ வைத்துச் செய்வதற்கு வடக்கில் தேசிய மக்கள் சக்திக்கு இடமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றநிகழ்வுஒன்றின்பின்ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை மக்கள் சர்வதிகாரம், கடத்தல், கொள்ளை, கற்பழிப்பு வேண்டாம் எனத்தான் 3 வீத வாக்கைப் பெற்றிருந்த ஜேவிபிக்கு 42 வீத வாக்கை கொடுத்து மக்கள் இந்த ஆசனங்களை கொடுத்திருந்தார்கள். இல்லை நாங்கள் 3 வீதத்திற்கு தான் போகப் போறோம் என்றால் அது அவர்களின் பிரச்சினை.

வடக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சிக்கோ அல்லது தமிழ் தேசியக் கட்சிகளுக்கோ வைச்சு செய்யப் போவதாகவும் தேசிய மக்கள் சக்தி கூறியுள்ளது. என்னத்தை வைச்சு செய்யப் போறீர்கள். யாரை வச்சு செய்யப் போறீர்கள். அதையும் கூற வேண்டும். வைச்சு செய்வதற்கு வடக்கில் இடமில்லை. இதே நிலையில் தேசிய மக்கள் சக்தி செல்வார்களாக இருந்தால் மக்கள் பாடம் புகட்டுவார்கள். - என்றார். 100

# ஏணியில் ஏறியவர் கீழே விழுந்து சாவு

(பர்ஸான்)

ஏணியில் ஏறிய நபரொருவர் கீழே விழுந்து மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தனது வீட்டின் கூரையினை ஏணியில் ஏறி சுத்தம் செய்ய முயற்சித்த 83 வயதுடைய நபர் ஏணியில் இருந்து கீழே விழுந்துள்ளார்.

தலை, இடுப்புப் பகுதி கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குறித்த நபர் மரணமடைந்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலை மாவட்ட செயலகத்தில் சிறப்புற்ற வெசாக் தின நிகழ்கள்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வெசாக் தினத்தினை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார அவர்களின் தலைமையில் புதன்கிழமை வெசாக் நிகழ்வானது மாவட்ட செயலகத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இதன்போது தொடர்ந்து பக்தி கீதங்கள் இசைக்கப்பட்டு மேடையை அலங்கரித்தன. பக்தி கீதங்களில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்கள் பலரும் இந்த பக்தி கீதங்களில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி ,அரச உயரதிகாரிகள் , அரச உத்தியோகத்தர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.









# வவுனியாவில் கூடிய ஆசனம் பெற்றவர்களுக்கே ஆதரவு

## சங்கு-தமிழரசு வவுனியாவில் உடன்பாடு

வவுனியாவில்உள்ளஉள்ளூராட்சிசபைகளில் கூடிய ஆசனங்களை பெற்றுக்கொண்ட கட்சிக்கு மற்றைய தரப்பு ஆதரவளிக்கும் வகையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும், இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான கலந்துரையாடல் வவுனியாவில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

வவுனியா மாநகர சபையில் சங்கு கூட்டணி ஆட்சி அமைப்பதற்கு இலங்கை தமிழரசுக் கட்சி முழுமையான ஆதரவினை வழங்கும். அதேபோல்வவுனியாதெற்கு,வவுனியாவடக்கு, செட்டிகுளம் பிரதேச சபைகளில் தமிழரசுக் கட்சி கூடிய ஆசனங்களை பெற்றுள்ளமையால் நாங்கள் ஆட்சியமைப்பதற்கு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தங்களது பூரண ஆதரவினை வழங்குவதாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஆட்சியமைப்பதற்கான இணக்கப்பாடே தற்போது ஏற்பட்டுள்ளது. சபைகளின் தவிசாளர், பிரதி தவிசாளர்களை நியமிப்பது எங்களுக்கு சிறிய பிரச்சினை. சபை அமைக்கும் சந்தர்ப்பத்தில் அதனை எங்களுக்குள் பேசி தீர்மானித்துக்கொள்வோம். அத்துடன் சில கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்டு வென்றவர்களுடன் நாம் கலந்துரையாடியுள்ளோம்.



சபைகள் தொங்கு நிலையில் உள்ள ஆட்சியாக இல்லாமல் பூரண பலம் கொண்ட முடிவுகளை எடுக்கக் கூடிய மன்றங்களாக வவுனியாவில் உள்ள நான்கு மன்றங்களும் இருக்கவேண்டும். எனவே வவுனியாவில் உள்ள நான்கு சபைகளிலும் நாங்கள் ஆட்சியமைக்கக் கூடிய சூழல் இருக்கிறது.

அத்துடன்இந்தஇணக்கப்பாடுஉள்ளூராட்சி மன்றத்துடன் மாத்திரம் முடிவடையாமல் தொடரவேண்டும் என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த இணக்கப்பாட்டை வடக்கு கிழக்கு முழுவதும் தொடர்வதற்கு இரண்டு கட்சிகளின் தலைமைகளும் பேசி ஒரு முடிவிற்கு வருவார்கள் என எதிர்பார்கிறோம்.

வடக்கு - கிழக்கு முழுவதும் தமிழரசுக் கட்சியும், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியும் இணைந்து பயணிப்போம். வவுனியா போன்று ஏனைய இடங்களிலும் நாங்கள் கூடிய ஆசனங்களைப் பெற்ற இடங்களில் ஆட்சி அமைப்பதற்கான செயற்பாட்டை மேற்கொள்வோம். எங்களுக்கு ஆட்சி அமைக்க உதவி செய்யும் தமிழ் தேசியக் கட்சிகளுக்கு வெளியே உள்ள சில கட்சிகள் அல்லது குழுக்கள் தாம் ஆட்சி அமைக்க உதவ வேண்டும் எனக் கோரியமை தொடர்பிலும் பேசியுள்ளோம். இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். 100




# தாருஸ்ஸலாம் அரபுக் கல்லூரின் முதலாவது பட்டமளிப்பு விழா

(பர்ஸான்)

வாழைச்சேனை - தியாவட்டவான் பிரதான வீதி எனும் முகவரியில் இயங்கி வரும் தாருஸ்ஸலாம் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாவும், வெள்ளி விழா நிகழ்வும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

கல்லூரியின் தலைவரும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேசசெயலககலாசாரஉத்தியோகத்தருமான அஷ்ஷெய்க் ஏ.எல்.பீர் முகம்மட் காஸிமி தலைமையில் பட்டமளிப்பு விழா நிகழ்வு இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக ஏ.ஆர்.எம்.மன்சூர் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில், அல்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்த 75 ஹாபிழ்களும், 105 மௌலவிமார்களும் பட்டம் பெற்றனர்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக ஜம்இய்யதுல் அன்னாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா நிறுவனத்தின் பொதுத் தலைவர் அஷ்ஷெய்க் என்.பி.எம்.அபூபக்கர் சித்தீக் மதனி கலந்து கொண்டதுடன், முதன்மை உரையினை தென் கிழக்குப் பல்கலைக்கழக பதில் உப வேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத் நிகழ்த்தினார்.

சிறப்புரையினை பறகஹதெனிய தாருத் தௌஹீத் அஸ்ஸலபிய்யா அரபுக் கல்லூரியின் உப அதிபர் அஷ்ஷெய்க் கலாநிதி எம்.ஆர்.எம்.அம்ஜத் ராசிக் மதனி நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில், ஏனைய அதிதிகளாக சாய்ந்தமருது தைய்பா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அம்பாறை மாவட்ட தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம்.காஸிம் சூரி (மதனி), ஜம்இய்யதுல் அன்னாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யாவின் செயலாளர் ஏ.எல்.கலீலுர் ரகுமான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.05.2025இல் வெளியிடப்பெற்றது